# திராவிடப் போராளிகள்

28 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## ‘சிறைக்கு அஞ்சா சீற்றம்’

## பண்டிதை நாராயணி அம்மாள்

“நெருப்பில் எரியும் தீப்பொறி
அதற்கு முன்
கரியினுள் இருந்தது”

*(Powder exists in charcoal Before it exists in fire)*

எமிலி டிக்கின்சன் என்ற ஆங்கிலக் கவிஞரின் புகழ்பெற்ற கவிதை வரிகள் இவை.

ஒரு சமூக இயக்கத்தின் வளர்ச்சியும் அப்படித்தான். அதன் தோற்றுவாய்கள் பல இடங்களில் இருக்கும். உரிய கால கட்டத்தில் அது பேரெழுச்சி கொண்ட இயக்கமாக மாறும்.

சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி தான் திராவிட இயக்கத்தின் மூலம் என்பது சென்ற நூற்றாண்டின் வரலாறு. அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த வடமொழி எதிர்ப்பு, வர்ணாசிரம சாதி வேற்றுமைக்கு எதிராக சித்தர்கள், வள்ளலார் இராமலிங்க அடிகள், அயோத்திதாசர் என்று தொடர்ந்த எதிர்ப்புக் குரல்கள் அனைத்துமே திராவிட இயக்கத்தின் தேவையை உருவாக்கின. அதைப்போல தமிழும் சைவமும் ஆரியத்திற்கு எதிராக ஆற்றிய பணிகள் 20-ஆம் நூற்றாண்டில் தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன.

ஆரியத்திற்கு எதிரான தத்துவச் சிந்தனை பல தமிழறிஞர்களைச் சுயமரியாதை இயக்கத்துடன் இணைத்தது. அவர்கள் சுயமரியாதை இயக்கம் நடத்திய மாநாடு களிலும், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் பங்கேற்று, சாதிக்கும் சனாதனத்திற்கும் எதிராகவும் பெண்ணுரிமைக்கு ஆதரவாகவும் வலிமையாகக் குரல் கொடுத்தார்கள். அத்தகைய தமிழறிஞர் வரிசையில் தனித்துவம் மிக்கப் போராளியாகச் சுடர் விட்டவர் பண்டிதை நாராயணி அம்மையார். திராவிட இயக்க வரலாற்றில் அடிக்கடி நாம் கேட்ட பெயர்தான் அது.



ஓவியம் : ரவி பேலட்

### மேடை முழக்கம்


1938-ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று சென்னையை அதிரவைத்தது இந்தி எதிர்ப்புப் போர்ப்படையின் மாநாடு . மாநாட்டுத் தலைவர் மறைமலை அடிகள். பேருரை ஆற்றினார் பெரியார். அம்மாநாட்டில் உரையாற்றியோர் வரிசையில் அஞ்சா நெஞ்சன் அழகிரி, நாவலர் சோமசுந்தரப் பாரதியார், மூவலூர் இராமாமிர்தம், பண்டிதை நாராயணி என மேடையில் முழங்க, முன்னிடம் பெற்றவர் நாராயணி அம்மையார்.

13.11.1938 அன்று கூடிய தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டின் திறப்பாளராக நாராயணி அம்மையார் ஆற்றிய எழுச்சி உரை தமிழர்களைத் தட்டி எழுப்பியது. அந்த மாநாட்டின் அமைப்பாளர்களில் ஒருவராகவும் ஆலோசகராகவும் செயல்பட்டார். இம்மாநாட்டில் தான் நீலாம்பிகை அம்மையார் தலைமையில், “செயற்கரிய செயல்களைச் செய்துவரும் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் இனி “பெரியார்“ என்று மட்டுமே அழைக்கப்பட வேண்டும்’’ என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அப்பட்டம் வழங்க முடிவு செய்தவர்களில் நாராயணி அம்மையாரும் ஒருவர்.

**வேலூரில் கூடிய தமிழ்ப் பெண்கள் மாநாடும் இந்தி எதிர்ப்பு முழக்கத்தை ஓங்கி ஒலித்தது. அந்த மாநாட்டின் தலைவர் பண்டிதை நாராயணி அம்மையார். அம்மாநாட்டில் அவரது உரையின் சிறப்பைப் பாராட்டி, 27.12.1938 அன்று விடுதலை ஏடு அவரது புகைப்படத்துடன் முழுப்பக்கமும் அவரது உரையை வெளியிட்டது.**

சென்னையைத் தொடர்ந்து, 1938-ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27 இருநாட்களும் வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரில் கூடிய தமிழ்ப் பெண்கள் மாநாடும் இந்தி எதிர்ப்பு முழக்கத்தை ஓங்கி ஒலித்தது. அந்த மாநாட்டின் தலைவர் பண்டிதை நாராயணி அம்மையார். அம்மாநாட்டில் அவரது உரையின் சிறப்பைப் பாராட்டி, 27.12.1938 அன்று விடுதலை ஏடு அவரது புகைப்படத்துடன் முழுப்பக்கமும் அவரது உரையை வெளியிட்டது. அச்செய்தியின் தலைப்பே அவரது உரையின் சுருக்கமாக அமைந்தது கூடுதல் சிறப்பு.

“தலைமைப் பேருரை
தமிழ்மொழி வரலாறு
வடமொழியால் தமிழர்
கெட்ட கதை
பண்டைத் தமிழ்ப்பெண்கள்
மாண்பு
பண்டிதை நாராயணி
அம்மையார் முழக்கம்



தமிழ்மொழி வரலாறு.
வடமொழியால் தமிழர் கெட்ட கதை.
பண்டைத் தமிழ்ப் பெண்கள் மாண்பு.
பண்டிதை
நாராயணி அம்மையார் முழக்கம்
26.12-38ல் வேலூரில் நடைபெற்ற தமிழ்ப் பெண்கள் மாநாட்டில் தலைவர் பண்டிதை நாராயணி அம்மையார் நிகழ்த்திய சொற்பொழிவு.

### சிறைக்கு அஞ்சா சீற்றம்

பெண்கள் மாநாடுகளைத் தொடர்ந்து, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கைதாகி சிறை சென்ற வீராங்கனைகள், இளம் தாய்மார்கள் உட்பட 73 பேர். அவர்களுடன் சிறைசென்ற குழந்தைகள் 32 பேர்.

தொடர்ந்து தந்தை பெரியார் கைது செய்யப்பட்டார். 6.12.1938 அன்று அவருக்கு ஆறுமாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தகாலகட்டத்தில் தந்தை பெரியாரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி நடத்தப்பட்ட ஏராளமான கூட்டங்களில், உரையாற்றினார் நாராயணி அம்மையார்.

அதைத்தொடர்ந்து 1939-ஆம் ஆண்டு பிப்ரவரி 17 அன்று சென்னை பெரம்பூரில் கூடிய பெருங்கூட்டத்தில் “எங்கள் தலைவர் பெரியாரை ஒரு மாதத்திற்குள் விடுதலை செய்ய வேண்டும். இன்றேல் நான் முதலமைச்சர் ராஜாஜி இல்லம் முன் மறியல் செய்வேன்” என்று இறுதி எச்சரிக்கை விடுத்தார் நாராயணி அம்மையார்.

ஒருமாதம் முடிந்தது. பெரியார் விடுதலை செய்யப்படவில்லை. திட்டமிட்டபடி ஒரு ஊர்வலம். சென்னை பனகல் பூங்காவில் தொடங்கி, முதல்வர் ராஜாஜி வீடுவரை சென்றது. முதல்வர் வீட்டு வாசலில் நின்று **“பெரியாரை விடுதலை செய்”** என்று முழங்கிய பண்டிதை நாராயணி அம்மையார் கைது செய்யப்பட்டார். அவருக்கு ஆறு மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இத்தகைய தியாகத்தைச் செய்த நாராயணி அம்மையார் வாழ்க்கை குறித்துச் சில பதிவுகளே கிடைக்கின்றன.

### அட்டாவதானி

பூவை கலியாணசுந்தரனார் எனும் பெரும் புலவரிடம் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் கற்றுத் தேர்ந்தவர், முறையாகப் பண்டிதர் பட்டம் பெற்றவர் நாராயணி அம்மையார் . ராயபுரம் பெண்கள் பள்ளியில் பல ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். தமிழ் மொழிக்காகவும் நாட்டுக்காகவும் சிறைசெல்லவும் அஞ்சாத அந்த வீர வாழ்க்கை 1942 -ஆம் ஆண்டில் முடிவுற்றது. போராளிகள் வாழ்வுக்கு முடிவேது.?

(வருவார்கள்...)

---

## இரட்டை எஞ்சின் ஆபத்து!

மணிப்பூரில் நடப்பது, முழுக்க முழுக்கக் கனிமவள வேட்டைக்காக முதலாளித்துவத்தின், வலதுசாரிகளின் வன்முறை அரசியலே. பழங்குடியின சிறுபான்மை மக்களோடு, பெரும்பான்மை மைத்தேயி இனத்தை (பழங்குடியாக அறிவிக்கச்செய்து) மலைப்பகுதியில் குடியேற வைப்பதன் மூலம், அங்குள்ள மலைப்பகுதி கனிம வளங்களை வெட்டியெடுத்து, பணம் பண்ணும் நீண்டகால நோக்கிலான திட்டத்தின் தொடக்கமே!

சிறுபான்மைப் பழங்குடி மக்களை வீழ்த்துவதற்காக, மைத்தேயி இனக்குழுவுக்கு, அங்குள்ள காவல் நிலையங்களிலிருந்து ஆயிரக்கணக்கான துப்பாக்கிகள், வெடிபொருட்கள் தாரை வார்க்கப்பட்டன. ஓர் அரசாங்கமே இப்படிச் செய்வது, மிகமிகமிக மோசமான செயல்பாடாகும். இப்படி அரசே துணிந்து செய்வதற்கு, இரட்டை எஞ்சின் எனப் பெயர். மத்தியிலும் மாநிலத்திலும் பா.ஜ.க.வே ஆட்சி செய்யும் நிலையே காரணம்! இந்த இரட்டை எஞ்சின்களோடு மத்திய அரசின் விருப்பமான தொழில் முதலைகளும் சேர்ந்து செயல்படுவதுதான் இவ்வளவு காலமாக அங்கே இன அழிப்பும், மத ரீதியிலான திசைதிருப்பப்பட்ட வன்முறையும் நடப்பதற்குக் காரணமாகும். இப்போது வெளியான வீடியோ போல், நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நேர்ந்திருக்க வாய்ப்புண்டு என மிகச்சாதாரணமாகச் சொல்கிறார், மணிப்பூர் முதல்வர் பைரேன்சிங்.

இதே இரட்டை எஞ்சின்தான் உத்தரப்பிரதேசத்தில், கொரோனா காலத்தில் கங்கை ஆற்றில் சடலங்கள் மிதப்பதையும், கொரோனா சாவுகளை மறைப்பதிலும் கூட்டுச்சேர்ந்து செயல்பட்டன! ஆக, இந்த இரட்டை எஞ்சின் என்பது, இந்தியாவுக்கே கேடு! இதை இப்போதாவது உணராதவர்களுக்கு, வருங்காலம் நிச்சயமாகப் பாடம் கற்பிக்கும்! நாம் விழிப்படையாத வரை, நாமெல்லாம் நினைப்பதைவிட, இன்னும் இன்னும் கொடூரமாய் மாறும்! இப்போது மணிப்பூர் சிறு உதாரணம் மட்டுமே!

**....பத்திரிகையாளர் வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் பதிவிலிருந்து.**

---

## :ப்ளாஷ்பேக்



### கழகமே குடும்பம்!



ஆஷிக்

1990-ஆம் ஆண்டு ஜூலை 16-ஆம் தேதி, கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் இளைஞர் அணி சார்பாக, பேரறிஞர் அண்ணாவுக்கு சிலை நிறுவப்பட்டது. அதை அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் திறந்து வைத்தார். அப்போது சிலை அமைத்த இளைஞர் அணி நிர்வாகிகளில் ஒருவரான என் சித்தப்பா ஆ.ஜாகீர் பாஷா அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார் தளபதி. ‘கழகமே குடும்பம், குடும்பமே கழகம்’ எனக் கட்சி பணியாற்றுவதற்கு இது போன்ற பாராட்டுகளும் வாழ்த்துகளுமே உந்துசக்தியாக இருக்கின்றன.

**-ஆர்.எஸ்.ஆஷிக், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473

---


## கருவூலம்

### இலக்கியக் கூட்டங்கள்!

**1965-ஆம் ஆண்டு, அரசியல்களத்தில் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த போதே, கல்வி நிலையங்களின் இலக்கியச் சொற்பொழிவுகளிலும் பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர் எனக் கழகத் தலைவர்கள் பரபரப்பாக இருந்தனர். கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேச வருகிறார்கள் என்றால், மக்கள் கூட்டமும், கல்லூரி மாணவர்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் திரண்டு விடுவது வழக்கமானது. தங்களது கல்வி நிறுவனங்களுக்கும் வர வேண்டும் என வலியுறுத்தும் காலமாக இருந்தது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுக் கொடுக்கப்பட்ட தலைப்பில், சொற்பொழிவு நிகழ்த்த முடியும் எனக் கழகத் தலைவர்கள் நிரூபித்தனர். மொழி உணர்வை ஊட்டும் அரசியல் செயல்பாடுகளாக அவை அமைந்தன.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 190





எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.